1981 பிப்ரவரி 28]

விளாத்திகுளம் தாலூக்காவில் சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகள்.

*வினா எண் 304—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் தாலுக்காவில் சிட்கோ மூலம் சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகள் கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எத்தனை கட்டிடம் கட்ட உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; (அ) ஆம்.

(ஆ) தற்போதைக்கு 55 கட்டிடம் கட்டலாமா என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது,

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் பகுதியிலே ஊரக தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் கட்டுவதற்காக சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரின்போதே 100-க்கு மேபட்ட மனுக்களை நெல்லை கலெக்டர் மூலமாக சிட்கோவிற்கு அனுப்பியிருக்கிறேன். அவைகள் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு 6 மாதங்களுக்கு மேலாகிறது. ஒவ்வொரு இடங்களிலும் 10-க்கு 10 என்று தொழிற் கூடங்கள் ஏற்படுத்துவதற்கு கூட்டுறவு தொழிற் சங்கத்தின் மூலமாக அனுப்பியிருக்கிறார்கள். எனவே, உடனடியாக இந்த அரசு அந்தத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து 50 இடங்களிலாவது இப்படிப்பட்ட தொழிற் கூடங்களை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவலின்படி, அரசுத் தரப்பிலே சுணக்கம் இருப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தகவல் வந்த வகையில், இதுவரையில் திருநெல்வேலிமாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலிருந்து சிறிய தொழில் கூடங்கள் அமைப்பதற்கு புரோபசல் வரவில்லை ; வந்ததாகத் தகவல் இல்லை. எனவே இந்த, இரண்டு உணர்வுகளையும் வைத்து, விரைவிலே தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நானே நேரடியாகச் சென்று அந்த நிலத்தின் சொந்தக்காரரின் ஒப்புதலைப் பெற்று, சிட்கோ மூலமாக தொழிற் கூடங்கள்

அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். இருந்த போதிலும்: நம்முடைய திட்டங்கள் விரைவிலே செயல்படுவதற்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இதிலே அமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக ஆங்காங்கே தொழிற்சாலைகள் கட்டுவதற்கு வழிவகைகள் செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாக செய்யும்,

கீழ்மாறாமலையிலுள்ள அரசு கிராம்புத் தோட்டம்.

*வினா எண் 305—திரு. டி. மணி: மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் கீழ்மாறாமலையிலிருக்கும் அரசுக்கு சொந்தமாக உள்ள கிராம்புத் தோட்டத்தில் பெண் தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அது சம்பந்தமான புகார்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) அதன் மீது எடுத்த நடவடிக்கையென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை; பொதுவாக மண்வெட்டுதல் போன்ற கடுமையான வேலைகளுக்கு ஆண் ஆட்களும், தண்ணீர் ஊற்றுவது போன்ற மென்மையான வேலைகளுக்கு பெண் ஆட்களும் அமர்த்தப்படுவது வழக்கம்.

(ஆ) புகார்கள் ஏதும் வரவில்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

[முற்பகல் 9.30]

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தக் கேள்வி ஏற்கனவே 6 மாதங்களுக்கு முன்னால், கடந்த சட்ட மன்றக் கூட்டத்தின்போது கொடுக்கப்பட்டது. அப்போது அங்கே பெண் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத காரணத்தினால், சத்தியாகிரகப் போராட்டம் நடந்தது. என்னுடைய இப்போதைய கேள்வி, இப்போது அங்கே பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்களா? கொடுமையான வெய்யில் காலத்தின் போது கிராம்புக்கு தண்ணீர் ஊற்றினால்தான் பாதுகாக்க முடியும். அந்த அடிப்படையில் அங்கே இப்போது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS